# திராவிட மாடல் அரசு 25

**‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி.**





## சட்டமன்றம் 2.0..!

ஆங்கிலேயர் ஆட்சியில், மாண்டேகு செம்ஸ்போர்டு திட்டத்தின் கீழ் 1920-ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் சட்டமன்றம் சென்றனர். சென்னை மாகாண சட்டமன்றம், 1921-ஆம் ஆண்டு ஜனவரியில் அன்றைய பிரிட்டிஷ் ஆளுநர் வெலிங்டன் தலைமையில், பிரிட்டிஷ் இளவரசர் கன்னாட் கோமகன் அவர்களால் முறைப்படி தொடங்கி வைக்கப்பட்டது.

**‘நீதிக்கட்சி’** என்றழைக்கப்படும் **‘தென்னிந்திய நல உரிமைச் சங்கம்’** பெரும்பான்மை பலத்துடன் ஆட்சி அமைத்திருந்த நேரம் அது. அதன் முதல் அமைச்சர் கடலூர் சுப்பராயலு அவர்கள் தலைமையிலான அமைச்சரவையும், ஆளும் கட்சி, எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களும் கொண்டதாக இருந்தது அந்த அவை. இப்படித்தான் இந்தியாவின் மிகப் பழமையான, முன்னோடியான சட்டமன்றங்களில் ஒன்றாக நம் தமிழ்நாடு சட்டமன்றம் திகழ்கிறது.

### நூற்றாண்டு கொண்டாட்டம்

2021- ஆம் ஆண்டு மே-7 அன்று ஆட்சிப் பொறுப்புக்கு வந்தது நம் கழகம். அடுத்து வந்த ஆகஸ்ட் 2-ஆம் தேதி, சட்டமன்ற நூற்றாண்டு விழாவையும், சட்டமன்றத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திறப்பு விழாவையும் ஒருங்கே நிகழ்த்திக் காட்டினார். அந்த விழாவை, அன்றைய குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் தொடங்கி வைத்தது குறிப்பிடத்தக்கது. மேலும், அவரே முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்களின் படத்தையும் திறந்து வைத்தார்.

நாடே திரும்பிப் பார்த்த அந்த நிகழ்ச்சிக்குப் பிறகு, சட்டமன்ற நடவடிக்கைகளில் மேற்கொள்ளப் பட்டு வரும் தனது புதுமையான முன்னெடுப்புகள் மூலம், மீண்டும் தமிழ்நாடு சட்டமன்றத்தை நோக்கி இந்தியாவைத் திரும்பிப் பார்க்கச் செய்திருக்கிறது ‘திராவிட மாடல் அரசு’.

### ‘காகிதமில்லா சட்டமன்றம்’

மாநில சட்டமன்றங்கள் மற்றும் நாடாளு மன்றத்தின் இரு அவைகளையும் மின்னணு மயமாக்கவும், காகிதமில்லாத மன்றங்களாக மாற்றும் குறிக்கோளுடனும் ஒன்றிய அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட ‘இந்தியாவை மின்னணு மயமாக்கும் திட்டத்தின்’ கீழ், கொண்டுவரப்பட்ட தேசிய இ-விதான் திட்டத்தை (நேவா - *National e-Vidhan Application - NeVA*), தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செயலகத்தில் நடைமுறைப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின் கீழ், கொரோனா பெருந்தொற்றின் காரணமாக சென்னை கலைவாணர் அரங்கத்தில், பேரவைக் கூட்டங்கள் நடைபெற்றபோது, டிஜிட்டல் முறையில் பேரவைக் கூட்டத்தை நடத்திடும்பொருட்டு, அனைத்து உறுப்பினர்களின் மேசைகளிலும் கணினிகள் பொருத்தப்பட்டன. அதோடு, உறுப்பினர்களுக்கு சிம் கார்டுடனான கையடக்க ‘சாம்சங்-எஸ்7’ கணினிகளும் வழங்கப்பட்டன. தொடர்ந்து, தமிழ்நாடு சட்டமன்ற வரலாற்றில் முதன்முறையாக, 2021- 2022 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கைகள் ‘காகிதமில்லா பட்ஜெட்’டாக பேரவையில் அளிக்கப்பட்டன.

கொரோனா பெருந்தொற்று காலத்துக்குப் பிறகு மீண்டும் புனித ஜார்ஜ் கோட்டையில் பேரவைக் கூட்டம் நடைபெற்றபோது, உறுப்பினர்களின் மேசைகளில் புதிதாக ‘சாம்சங் டேப்ளெட்’ எனும் கையடக்கக் கணினிகள் பொருத்தப்பட்டன. தொடர்ந்து, 2022-2023, 2023-2024 ஆகிய ஆண்டுகளுக்கான நிதிநிலை அறிக்கைகளும் ‘காகிதமில்லா பட்ஜெட்’டாகவே அளிக்கப்பட்டு வருகின்றன. இதே டிஜிட்டல் முறையில்தான் 2023- ஆம் ஆண்டு ஜனவரி 9 அன்று, புனித ஜார்ஜ் கோட்டையில் ஆளுநரும் தனது உரையை வாசித்தார்.

❖ சட்டப் பேரவை நிகழ்ச்சி நிரல், வினாக்கள் விடைகள், நேரமில்லா நேர நடவடிக்கைகள் உள்ளிட்டவற்றை ஆங்கிலம் மற்றும் தமிழ் ஆகிய இருமொழிகளிலும் கையடக்கக் கணினிகளின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர்கள் பார்வையிட, மின் புத்தக வசதி செய்யப்பட்டிருக்கிறது.

❖ டிஜிட்டல் முறையிலான சட்டப் பேரவை நடவடிக்கைகள் குறித்து, உறுப்பினர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டிருக்கிறது.

❖ பேரவைக் கூட்டம் நடைபெறும் சமயத்தில், அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்களின் பங்கெடுப்பு, பேரவை மண்டபத்தினுள் பொருத்தப்பட்டுள்ள பெரிய திரைகளில் காட்சிப்படுத்தப்பட்டு வருகிறது. இது அனைத்து உறுப்பினர்களின் வரவேற்பைப் பெற்றுள்ளது.

❖ சட்டமன்றப் பேரவை நாட்களில், வினாக்கள்-விடைகள் நேரம், 110-விதியின் கீழ் முதலமைச்சரின் அறிவிப்புகள் மற்றும் நன்றியுரை, அரசின் சட்ட முன்முடிவுகள், அரசின் தனித் தீர்மானங்கள், ஆளுநர் உரை, அதற்கு முதலமைச்சரின் பதிலுரை, நிதி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர்களின் பதிலுரைகள் மற்றும் மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்துக்கு அமைச்சர் பெருமக்களின் பதிலுரைகள் ஆகியவையும் நேரடி ஒளிபரப்பு செய்யப்படுகின்றன.

❖ சட்டமன்றப் பேரவைக்கென தனியாக யூடியூப் சேனல் ஒன்றும் தொடங்கப்பட்டு, சட்டமன்ற நடவடிக்கைகள் நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

### சட்டமன்ற நிகழ்வுகள் நேரடி ஒளிபரப்பு

தேர்தல் அறிக்கையிலே சட்டமன்றக் நடவடிக்கைகள் நேரடி ஒளிபரப்பு செய்யப்படும் என்று நம் கழகம் சொல்லியிருந்தது. அதனை நிறைவேற்றும் விதமாக, 2021 செப்டம்பர் 9-ஆம் தேதி அன்று முதலமைச்சர் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டார். அதன்படி தமிழ்நாடு சட்டமன்ற 16-வது பேரவையின் மூன்றாவது கூட்டத் தொடரின் முதல் கூட்டம் 2022 ஜனவரி 5- ஆம் தேதி, ஆளுநர் உரையுடன் தொடங்கியதிலிருந்து, நேரடி ஒளிபரப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நாட்டிலேயே, சட்டமன்ற நடவடிக்கைகளை நேரடி ஒளிபரப்பு செய்யும் முதல் மாநிலம் என்ற பெருமையை தமிழ்நாடு பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நேரடி ஒளிபரப்பு செய்யும் பணிகள், நடைமுறையில் உள்ள கட்டணத்தின் அடிப்படையில், தூர்தர்ஷன் மற்றும் தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனத்தின் முதல் சேனல் மூலமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தவிர, தமிழ்நாடு திரைப்படப் பிரிவின் மூலம் பதிவு செய்து வழங்குவதைப் பெற்று, யூடியூப், ட்விட்டர், ஃபேஸ்புக் போன்ற சமூக ஊடகங்களின் மூலமாகவும் நேரடி ஒளிபரப்பு வழங்கப்படுகிறது.

மேலும் சபை நடவடிக்கைகளை, சபை குறிப்பிலிருந்து நீக்கப்படும் பகுதிகளை உன்னிப்பாகக் கவனித்து, தேவையானவற்றை மட்டும் ஊடகங்க ளுக்கு அளித்திடும் ஒருங்கிணைப்புப் பணியினை, சட்டமன்றப் பேரவைச் செயலகத்தில் அனுபவம் வாய்ந்த அலுவலர்கள் மற்றும் செய்தி மக்கள் தொடர்புத் துறை அலுவலர்கள் மேற்கொள்கின்றனர்.

### டிஜிட்டல்மயமாகும் வரலாறு

2021- ஆம் ஆண்டு, ஆகஸ்ட் 13 அன்று நிதி அமைச்சர் அவர்கள், சட்டமன்றத்தில் செய்த அறிவிப்புக்கிணங்க, 1921-ஆம் ஆண்டு முதல் சட்டப் பேரவை மற்றும் மேலவையில் நடைபெற்ற முக்கிய நிகழ்வுகள் குறித்தும், வரலாற்றுச் சிறப்புமிக்க விவாதக் குறிப்புகளையும், சட்டப் பேரவை தொடர்பான இதர முக்கிய ஆவணங்களையும் கணினிமயமாக்கம் செய்வதற்கான பணிகள், தமிழ்நாடு மின் ஆளுமை முகமையால் ரூ.2.34 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சட்டமன்றப் பேரவை நடவடிக்கைக் குறிப்புகள் சுமார் 1,50,000 பக்கங்கள் இதுவரை கணினிமயமாக்கம் செய்யப்பட்டுள்ளன. 2024-ஆம் ஆண்டுக்குள் இந்தப் பணிகள் முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இப்படிப் பல தளங்களில் ‘காகிதமில்லா சட்டமன்றம்’ எனும் புதுமையை நிகழ்த்தி வருவதற்காக தமிழ்நாடு அரசுக்குக் கடந்த வாரம் ஒன்றிய அரசின் நாடாளுமன்ற விவகாரத் துறை அமைச்சகம் பாராட்டுச் சான்றிதழ் வழங்கிச் சிறப்பித்துள்ளது. ஆம்... ஒவ்வொரு துறையிலும் நவீனம்... ஒவ்வொரு முயற்சியிலும் புதுமைச் சிந்தனை... என்பதெல்லாம்தான் ‘திராவிட மாடலின்’ டி.என்.ஏ...!

...சாதனை தொடரும்

## தப்புத் தப்பான குற்றச்சாட்டு!

பா.ஜ.க. மற்றும் வலதுசாரி ஆதரவாளர்களால் விதந்தோதப்படும் பொருளாதார நிபுணர் ஷமிகா ரவி. அவர் ‘இந்தியன் எக்ஸ்பிரஸ்’ இதழில், சில நாட்களுக்கு முன்பு கட்டுரை ஒன்றை வெளியிட்டார்.

அதன் சாராம்சம் இதுதான். மக்கள் தொகை, பொருளாதார வளர்ச்சி உள்ளிட்ட பல விஷயங்களை கணக்கெடுப்பதற்காக, ஒன்றிய அரசின் புள்ளியியல் துறையைச் சார்ந்த தேசிய மாதிரி ஆய்வு அமைப்பு (நேஷனல் சாம்பிள் சர்வே ஆர்கனைசேஷன்), தேசிய குடும்ப சுகாதார ஆய்வு (நேஷனல் ஃபேமிலி ஹெல்த் சர்வே), காலமுறை தொழிலாளர் கணக்கெடுப்பு (பீரியாடிக் லேபர் ஃபோர்ஸ் சர்வே) போன்ற பல துறைகள் உள்ளன. அவை கள ஆய்வு செய்து, அதிலிருந்து கிடைக்கும் தரவுகளை வைத்து, அதற்கேற்றாற் போல மக்கள் நலத் திட்டங்கள் வடிவமைக்கப்படுகின்றன.

‘ஆனால் இந்த அமைப்புகள் எல்லாம் முறையாக தரவுகளைச் சேகரிப்பதில்லை. எனவே, அவை தரும் தரவுகளைக் கொண்டு நாட்டினுடைய வளர்ச்சியை ஆய்வு செய்வதால், அது நாட்டினுடைய உண்மையான வளர்ச்சியை மட்டுப்படுத்தியே காட்டுகிறது’ என்று எந்தவொரு ஆதாரமும் இல்லாமல் குற்றம்சாட்டுகிறார். ஒன்றிய அரசின் அமைப்புகளையே அவர் கேள்விக்கு உட்படுத்துகிறார். எனவே அவரது இந்தக் கட்டுரையை, ‘முட்டாள்தனமானது’ என்று பொருளாதாரம், புள்ளியியல், பத்திரிகை உள்ளிட்ட பல்துறை நிபுணர்கள் விமர்சித்து வருகிறார்கள். சரி இந்த ஷமிகா ரவி யார் தெரியுமா..? ஆளுநர் ரவியின் மகள்தான். பிரதமருக்கான பொருளாதார ஆலோசனைக் குழுவில் உறுப்பினராக இருக்கிறார். ஆதாரம் இல்லாமல் வாய்க்கு வந்ததை அடித்துவிடுவதில், தந்தை வழியில் மகள்.

## ஃப்ளாஷ்பேக்



### தங்கச் சுரங்கத்தில் தலைவர்!

கர்நாடக மாநிலம், கோலார் மாவட்டத்தில் உள்ள தங்கவயல் நகருக்கு, கழகப் பொதுக்கூட்டம் ஒன்றில் பேசுவதற்காக 1957-ஆம் ஆண்டு மார்ச் 9-ஆம் தேதி முத்தமிழறிஞர் கலைஞர் வந்திருந்தார். அப்போது, கழக நிர்வாகிகளிடம், ‘தங்கச் சுரங் கத்தில் தங்கம் எப்படி வெட்டி எடுக்கப்படுகிறது?’ என்று கேட்டதுடன், ‘சுரங்கத்தில் இறங்கிப் பார்க்க முடியுமா?’ என்றும் கேட்டுள்ளார். தலைவரின் விருப்பத்தைப் பூர்த்தி செய்யும் நோக்கில் கழக நிர்வாகிகள் தங்கச் சுரங்க நிறுவன அதிகாரிகளிடம் பேசி அனுமதி பெற்று, சுமார் 4 ஆயிரம் அடி ஆழத்துக்குச் சுரங்கத் தொழிலாளர் அணியின் தொப்பி, கால் பூட்ஸ் அணிந்து சென்று பார்வையிட்டார். வலது பக்கத்தில் இருப்பவர் மாரிமுத்து, இடது பக்கத்தில் இருப்பவர் கோவிந்தன்.



கலையரசன்

**-சு.கலையரசன், மாநில தி.மு.க. முன்னாள் துணை அமைப்பாளர், கர்நாடகா.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### திராவகம் வீச்சு!

**1986 பிப்ரவரியில், விழுப்புரம் மாவட்டம், கூட்டேரிப்பட்டு தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசிவிட்டு, காரில் ஏறிய கலைஞர் மீது திராவகமும் கண்ணாடித் தூள்களும் கலந்த கலவையை பாட்டிலில் அடைத்து வீசப்பட்டது. அது காரின் முன்பக்க கண்ணாடியில் பட்டுச் சிதறியது. கண்ணாடி உடையவில்லை என்பதால், கலைஞர் உயிர் தப்பினார். அராஜகம், அதிகார துஷ்பிரயோகம் கட்டவிழ்த்து விடப்பட்டிருந்தது. “அவர்கள் திராவகத்தை வீசட்டும், நாம் திறமையால் சந்திப்போம். அவர்கள் கண்ணாடி பாட்டில்களை வீசட்டும், நாம் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு காத்து வெற்றியைச் சந்திப்போம்” என தேர்தல் பிரசாரங்களில் முழங்கினார் கலைஞர்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 174




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2021-2023.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2021-2023 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.